கலாதீபம்
කලාදීපම්
KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.12.2023 | தீபம் 18

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்
# நூற்றாண்டு சிறப்புரை நிறைவு நிகழ்வு
# வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி
# கலந்து சிறப்பித்தார்

நூற்றாண்டு கால புதன் ஒன்றுகூடல் சிறப்புரை நிறைவு நிகழ்வு 15.11.2023 கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் ஆரம்பமாகியது.

முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். திரு பைத்துள்ளா பர்ஸாத் தலைமையேற்று நடத்தினார்.

முதலாம் வருட ஆங்கில நெறி ஆசிரிய மாணவன் திரு சிவராசா மயூரன் chronic obstructive pulmonary Disease (COPD) எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் திரு வ.சி. குணசீலன் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திரு த.சத்தியமூர்த்தி அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

அவர் ஆசிரியர்களும் நேர் மனப்பாங்கும் எனும் தலைப்பில் உரையாற்றினார். கலாசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் முகாமைத்துவ குழுவினர் அதிதியை பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

கலாசாலை ஊடகமன்றத்தால் மேற் கொள்ளப்பட்ட ஆசிரிய மபணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. நிறைவு உரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார்.







## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


# கலாசாலையில் நூற்றாண்டையொட்டிய மரம் நாட்டும் வைபவம் 07.11.2023

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை ஒட்டிய மரம் நாட்டும் வைபவம் 07.11.2023 செவ்வாய் காலை கலாசாலை வெளிப்புற வீதியோரத்தில் முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் உலக உணவுத் திட்ட (WFO) செயற்றிட்டத்தின் கீழ் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கலாசாலையின் எல்லையில் உள்ள பிரதான வீதியோரம் சித்திர வேம்பு மரங்கள் நாட்டப்பட்டு சீமெந்தினால் அதற்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் இணைந்து தொடக்கி வைத்தனர்.

கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் திருமதி க. குணசீலி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலாசாலையின் பிரதிஅதிபர் த. கோபாலகிருஷ்ணன் உபஅதிபர் சத்தியா றஞ்சிற் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் கல்வி சாரா அலுவலர்கள் சித்திர வேப்ப மரங்களை நாட்டி வைத்தனர்





# கலாதீபம்

KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### கார் காலத்தில் மரம் நடுகையை ஊக்குவிப்போம்.

மரங்கள் இயற்கையின் செல்வங்களாக விளங்குகின்றன. இருப்பினும் துரதிஷ்டவசமாக மரங்களின் மாண்பை உணராத சமூகத்தினர் மரங்களின் மாண்பை அழித்து வருகின்றனர். நகர மயமாக்கல் குடியிருப்புக்களின் பெருக்கம் போன்ற காரணிகளால் மரங்களை இந்த மண் இழந்து வருகிறது.

மரங்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் பரப்பு வதற்காக பல்வேறு அமைப்புக்களும் மர நடுகையை ஊக்குவித்து வருகின்றன.

அந்த வகையில் எமது கலாசாலையிலும் காலத்திற்குக் காலம் மரநடுகை செயற்பாடுகள் நடைபெற்றவண்ணம் உள்ளன. கலாசாலைக்கு வருகை தருவோரின் அபிப்பிராயப்படி கலாசாலை மரங்கள் சூழ்ந்த இயற்கை சூழலில் அமைந்திருக்கிறது என்பதும் எமக்கு பெருமை தருவதாகும்.

கலாசாலை நூற்றாண்டுச் செயற்பாடுகளில் ஒன்றாக கலாசாலையின் முன்பாகச் செல்லும் இருபாலை கோண்டாவில் இணைப்பு வீதியின் இரு மருங்கிலும் நூறு மரங்களை நாட்டவேண்டும் என்ற விருப்பை ஏற்படுத்தியிருந்தோம். இருப்பினும் மரங்களுக்கு காவலாக அமையும் கூண்டு அமைப்பதற்கான செலவு உயர்வாக இருந்தமையினால் அந்த எண்ணத்தை ஈடேற்ற முடியவில்லை.

எமது நிலையை உணர்ந்த வலிகாமம் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் அவர்களின் சிபாரிசினால் உலக உணவுத்திட்டத்தின் ஒரு கூறாக எமது கலாசாலை முன்புறத்தில் சித்திரவேம்பு மரங்கள் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இது பலராலும் விதந்து பாராட்டப்பட்டது. இதனைப் பாதுகாக்கும் வகையில் சீமெந்தினால் சுமார் 12,000 ரூபா பெறுமதியான கூடு ஒவ்வொரு மரத்திற்கும் அமைக்கப்பட்டமையும் சிறப்புக்குரியதாகும்.

மரங்கள் எதிர்காலத்தில் எமது மண்ணை காப்பாற்றும் இயற்கை வளங்களாகும். இதன் பெறுமதியை உணர்ந்து நாம் இந்த கார்காலத்தில் எமக்குப்பிரிய மானவர்களின் நினைவாக ஒரு மரத்தையாவது வீடுகளில் நடுகை செய்வது பொருத்தமானது. மரம் வளர்ப்போம் இயற்கையால் எமது மண்ணைக் காப்போம்.

அதிபர்

## கலாசாலை யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மணவாளக்கோலம் 05.11.2023

.கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேசுவரர் ஆலயத்தின் மணவாளக் கோலத்தை ஒட்டி (கும்பாபிஷேகம் இடம்பெற்ற தினம் - ஐப்பசி பூசம்) ஸ்நபன அபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது

ஞானம் முருகேசு அம்மையார் அதிபராக இருந்த காலத்தில் (1947 - 1962) காரைநகர் பேப்பர் சுவாமி மீது அவர் மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

பேப்பர் சுவாமி அடிக்கடி கலாசாலைக்கு வருகை தந்து யோக நிஷ்டையில் வீற்றிருந்த இடத்தில் ஞானம் முருகேசு அவர்களால் யோக மண்டபம் அமைக்கப்பட்டது. இந்த இடத்தில் யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளும் (1960) வருகை தந்து யோக நிஷ்டையில் கூடி ஆசீர்வதித்தார். இதன் காரணமாக யோக மண்டபம் என்ற பெயர் பொருத்தம் சிறப்பாக உள்ளது. 2014 ஐப்பசி மாத பூச நட்சத்திர நாளில் யோகாம்பிகை சமேத யோகலிங்கேஸ்வரர் சுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம் பெற்றது இந்த நாளே மணவாளக்கோல தினமாக கொள்ளப்படுகிறது.





# News in Brief - Month of November

**01.11.2023**
**Wednesday Assembly**
It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by second year Tamil, Maths, Christianity, Commerce Courses, The event was moderated by Mrs. K. Yalini, teacher trainee second year Christianity .
Guest Speaker Mr Sivasambu Mathiyalagan, Deputy Director of Education, Valikamam Education Zone and the 2001/2002 batch teacher trainee. Delivered a talk about Teacher Profession. Mrs. K. Anparasy Lecturer delivered the introductory speech. Mr. S. Gajaraj, a second year mathematics teacher Trainee, delivered a student speech on diabetes.

**07.11.2023**
**A tree-laying ceremony to mark the centenary of Kopay Teachers' College**
The tree-laying was carried out under the World Food Programme (WFO) programme led by the Kopay Divisional Secretariat.

**08.11.2023**
**Wednesday Assembly**
It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by First year Primary, Special Education, 2NL Courses, The event was moderated by Mrs. K..Vijitha, teacher trainee First year Primary.
Mr. Kalamani Paranitharan, Chief Editor of Jeevanathi Magazine participated as the Guest Speaker. Addressed on Eelam Literature.
Mr Vel.Nanthakumar Lecturer delivered the introductory speech. Mrs. K. Mythili, a First year Primary teacher trainee, delivered a student speech on Let's celebrate Eelam literature.

**15.11.2023**
**Kopay Teachers' College Centenary Commemoration Award was given to three key contributors.**
Mr. Selvanayakam Kajanthan (Technical officer)
Mr.Thankan Inpathas - Physical Education (2021/2022) Teacher Trainee
Mr.Celestine Kaniston - Christian Studies (2021/2022) Teacher Trainee Who have contributed greatly to the field of Media.
This special honor was given by the Director of Jaffna Teaching Hospital Dr. T. Sathiyamoorthy.
The principal, Deputy Principals and Management committee of the college were present. Ms. Dharshini Muthurajah, Petron of Media Club moderated this event.

**15.11.2023**
**Wednesday Assembly**
It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by First year English Course, The event was moderated by Mr B.Farsath, teacher trainee second year English.
Guest speaker Director of Jaffna Teaching Hospital Dr. T. Sathiyamoorthy Delivered a talk about Positive Attitude. Mr. V.S. Gunaseelan Former-Lecturer who delivered the introductory speech. Mr. S.Mayooran, a first year English teacher trainee, delivered a student speech on Chronic Obstructive Pulmonary Disease (COPD).

**23,24.11.2023**
**Activity Based Oral English—workshop**
A two day, ABOE workshop was held at our training college on 22nd and 23rd of November 2023. The workshop was sponsored by the IMHO, USA. The Country Director Mr K.Krishnakumar, our Principal and our Deputy Principal, were there at the Inauguration ceremony and facilitated the programme.
The Resource Persons were Mrs Kalaimahal Benedict and Mr Chelliah Thayaharan.
Both days, teachers were involved in a variety of activities such as songs and games. 24 primary teacher trainees took part in the workshop.
They learnt how to introduce English in grades 1 and 2. Further, they learnt classroom room language and communicative English prescribed by the Ministry of Education at Key stage 1.
Teachers had micro sessions and planned a scheme for their future use.
They all actively participated and shared their knowledge. As they are leaving the Training College soon after their final exam, this knowledge will help them to enter the classes with confidence. Throughout the workshop, they looked very positive and showed their talents. We wish them good luck for their final exam.
By - Mr Chelliah Thayaharan(Former ISA Jaffna Zone)

# புதன் 01.11.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக திரு சிவசம்பு மதியழகன்

**(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமக் கல்வி வலயம், முன்னாள் ஆசிரிய மாணவன் 2001/2002)**

## கலந்து சிறப்பித்தார்

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

இரண்டாம் வருட கிறிஸ்தவநெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். திருமதி க.யாழினி தலைமையேற்று நடத்தினார்.

இரண்டாம் வருட கணிதநெறி ஆசிரிய மாணவன் திரு ச.கஜராஜ் நீரிழிவு நோய் பற்றிய மாணவர் உரையினை ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம் சிவசம்பு மதியழகன் (முன்னாள் ஆசிரிய மாணவன் 2001/2002 அணி) அவர்கள் கலந்து கொண்டார். ஆசிரியத்துவம் என்ற பொருளில் உரையாற்றினார்.

அவர் தான் கலாசாலையில் கற்ற காலத்தில் பெற்றுக் கொண்ட அனுபங்களை தற்கால கற்பித்தல் மற்றும் நிர்வாக செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுக் கூறினார்.

ஒரு சமுதாயம் அறிவார்ந்த சமுதாயமாக இருக்கின்றதென்றால் அதற்கு அர்ப்பணிப்பும் நல்லெண்ணமும் கொண்ட ஆசிரியர்கள் தான் காரணமாக இருக்க முடியும். எந்தக் கால த்துக்கும் பொருந்தக்கூடிய ஆசிரியர்களின் அறிவுரைகளும் வழிகாட்டல்களும் அனைவ ரையும் வழிநடத்தும்.

எனவே இச்சமூகத்தின் சிறந்த வழிகாட்டிகள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையல்ல. ஒரு சிலர் ஆசிரிய தொழிலின் மகிமை அறியாது அதனை தவறாக பயன்படுத்துகின்றனர். இந்த முறை மாறவேண்டும் நல்ல ஆசிரியர்கள் உருவாகி இந்த சமூகத்துக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். என அவர் தனது உரையில் தெரிவித்தார்.

கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். நிறைவு உரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார்.












# புதன் 08.11.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக திரு கலாமணி பரணீதரன் (பிரதம ஆசிரியர் ஜீவநதி) கலந்து சிறப்பித்தார்

**நூற்றாண்டு கால புதன் ஒன்றுகூடல்**
**வாசிப்பு மாத கருப்பொருளில் இடம்பெற்றது.**

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

முதலாம் வருட ஆரம்பக்கல்விநெறி, விசேட கல்விநெறி, இரண்டாம் மொழி தமிழ் ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். திருமதி விஜிதா கமலவண்ணன் தலைமையேற்று நடத்தினார்.

முதலாம் வருட ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி மைதிலி கோகுலகண்ணன் ஈழத்து நூல்களைக் கொண்டாடுவோம் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவி உரையினை ஆற்றினார். அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் விரிவுரையாளர் திரு.வேல்.நந்த குமார் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளராக ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு கலாமணி பரணிதரன் அவர்கள் கலந்து கொண்டார். ஈழத்து இலக்கிய சிற்றிதழ்கள் என்ற பொருளில் உரையாற்றினார்.

ஆசிரியர்களும் வாசிப்புப் பழக்கமும் - வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவேண்டும் எனும் பொருள்பட தனது உரையினைத் தொடர்த்தார்.

ஒர் ஆசிரியர் பல துறைகளிலும் கற்றுத்தேர்ந்த வராக இருத்தல் வேண்டும். தாம் சேவையாற்றுகின்ற காலத்தில் எத்தனையோ வகையான மாணவர்களைக் காணவேண்டும் அவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கான சஞ்சிகைகள், மாதாந்த இதழ்கள் பற்றிய விபரங்களையும் தனது உரை யில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் காலம்தோறும் வெளிவருகின்ற கற்றல் சார்ந்த பதிப்புக்கள் பற்றியும் விபரித்தார்.

அத்துடன் ஒரு தொகுதி ஜீவநதி சஞ்சிகைகளின் ஒரு தொகுதியினை கலாசாலையின் கிருஷ்ணை படிப்பகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். மேலும் 2024 ஆம் ஆண்டு முதல் ஜீவநதி சஞ்சிகைகளை இலவச பிரதியாக கலாசாலை நூலகத்திற்கு வழங்குவதாகவும் உறுதியளித்தார்.,

கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். நிறைவுரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார்.










# கலாசாலையின் ஊடக மன்றத்தினரால் மூவருக்கு சிறப்புக் கௌரவம்

01.01.2023 தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு காலத்தை ஆவணப்படுத்தும் முயற்சியினை அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

அதன் ஓர் அங்கமாக ஊடகமன்றத்தினை ஆரம்பித்து அதன் ஊடாக கலாசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் ஆவண ப்படுத்தப்பட்டன.

அதற்காக மாதாந்தம் வெளிவரும் கலாதீபம் மின்னிதழ் மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்னும் ஃபேஸ்புக் பக்கம் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. முக்கிய உரைகளின் காணொளிகள் youtube ஊடாகவும் உடனுக்குடன் தரவேற்றம் செய்யப்பட்டன.

இச்செயற்பாடுகளின் முக்கிய பணிகளான படம் பிடித்தல், வீடியோ தயாரித்தல் மற்றும் ஒலி அமைப்பு மேற்கொள்ளுதல் என்பவற்றை கலாசாலையின் கல்வி சாரா அலுவலர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

அந்த வகையில் இச் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றிய மூன்று பேருக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு விழாக் கால சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டது.

ஊடகத்துறை சார்ந்து சிறந்த பங்களிப்பை வழங்கிய

திரு செல்வநாயகம் கஜந்தன் (கற்பித்தல்சாரா தொழில்நுட்ப உத்யோகத்தர்)

திரு தங்கன் இன்பதாஸ் - உடற்கல்விநெறி ஆசிரிய மாணவன் (2021/2022)

திரு. செலஸ்தீன் கனிஸ்டன் - கிறிஸ்தவநெறி ஆசிரிய மாணவன் (2021/2022)

ஆகியோருக்கு இந்த சிறப்பு கௌரவம் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதன்போது கலாசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் முகாமைத்துவ குழுவினர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வுகளை ஊடகமன்றக் காப்பாளர் செல்வி தர்ஷினி முத்துராஜா அவர்கள் நெறிப்படுத்தினார்.









# கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு பெருமை சேர்த்த வித்துவான் சி.குமாரசாமி அவர்களது பிறப்பு நூற்றாண்டு தினம்

## 26.11.2023

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் அவர்கள் வழங்கிய பிரார்த்தனை உரை**

ஆசிரியர் கலாசாலைக்கு புகழ் சேர்த்த உன்னதமான விரிவுரையாளர்களுள் நயினை வித்துவான் சி குமாரசாமி ஐயாவுக்கு சிறப்பு மிக்க இடம் உண்டு 1923 . தோற்றம் பெற்ற புகழுக்குரியவர் வித்துவான் ஐயா ஆவார் 1975 - 1971 மற்றும் 1983 - 1979 என எட்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெறுவோருக்கு தமிழ் மற்றும் இந்து சமயம் சார்ந்த பாடங்களை போதித்து புகழ்பெற்றவர் வித்துவான் ஐயா ஆவார் .யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பண்டிதர் வகுப்புகளிலும் கல்வி திணைக்களம் நடத்திய வழிகாட்டலிலும் வளவாளராக இவர் வழங்கிய பங்களிப்பை கல்வி சமூகத்தினர் இன்றும் பெருமையுடன் நினைவு கூர்ந்த வண்ணம் உள்ளனர்.

கலாசாலையில் வழிபாட்டு இடமாக விளங்குகின்ற யோக மண்டபத்தின் விருத்தி பணிகளிலும் ரதிலட்சுமி மண்டப உருவாக்க பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்த பெருமைக்கு உரியவர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் தமிழ் விழாக்களுக்கு மங்காத பெருமை இன்றும் உண்டு . முன்னர்க் காலங்களில் முத்தமிழ் விழா கலாசாலையின் திறந்தவெளி அரங்கிலேயே இடம்பெற்றது.

ஒருமுறை முத்தமிழ் விழாவிற்கான விரிவான ஏற்பாடுகள் நிறைவு உற்ற நிலையில் கலாசாலையில் கனத்த மழை கொட்டி தீர்த்தது. கலாசாலை சமூகத்தினர் மனம் சோர்ந்து போயினர். அவ்வமையம் வித்துவான் குமாரசாமி ஐயா வர்ண பகவானை நோக்கி மழையை நிறுத்துமாறும் தமிழைக் காக்குமாறும் பாடல் பாடினாராம் என்ன ஆச்சரியம் மழையும் நின்றது வெயிலும் வந்தது நிலமும் காய்ந்தது விழாவும் கோலாகலமாக நடந்தேறியது.

தமிழ் துறை சார்ந்தவராதலால் கலாசாலையில் உத்தியோக பூர்வ மலராகிய கலை மலரில் பல்வேறு ஆக்கங்களை ஐயா எழுதியுள்ளார்.

வித்துவான் குமாரசாமியிடம் தமிழ் கற்று ஆசிரியர்கள் ஆளுமை மிக்கவர்களாக தம்மை அடையாளப்படுத்தினர் . அவர்களும் பலர் வயது மூப்பு காரணமாக ஓய்வு பெற்றுள்ளனர் .இன்றும் மிடுக்காக



**பண்டிதர் வித்துவான்**
**சி. குமாரசாமி**

"எங்கள் தமிழ் - வித்துவான் சி.குமாரசாமி ஐயாவிடம் பெற்ற தமிழ் "என்று விதந்து பேசிக் கொள்வர் .

ஆசிரிய கல்வியியலாளருக்குரிய சமூகக் கடமைகளை வித்துவான் சி.குமாரசாமி ஐயா செவ்வனே நிறைவேற்றினார் .அவர் அமரத்துவம் எழுதிய1994 இல் அவரது மெய்யுரு ஒன்றை வரைந்து கலாசாலையில் அஞ்சலி கூட்டம் நடத்தினராம். அந்த மெய்யுரு அதிர்ஷ்டவசமாகத் தற்போது மீள கிடைத்தமை அவர் இன்றும் நம்மோடு வாழ்கின்றார் என்பதன் அடையாளமாகவே கருதுகின்றேன்.

இந்த ஆண்டு குமாரசாமி ஐயாவின் பிறப்பு நூற்றாண்டு விழாவை முன்னெடுக்கும் பெரியோரை பணிந்து போற்றுகின்றேன் .கலாசாலை நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் தருணத்தில் வித்துவான் ஐயாவின் பிறப்பு நூற்றாண்டும் அமைவது எமது கலாசாலைக்கு மேலும் வலுவையும் புகழையும் சேர்த்திருக்கின்றது.

**வாழ்க வித்துவான் புகழ் வளர்க அவர் காட்டிய ஆசிரியம்.**

செந்தமிழ் சொல்லருவி
சந்திரமௌலீசன் லலீசன்
முதல்வர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

(30.11.2023 - நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் அன்னாரின் பிறப்பு நூற்றாண்டு விழா இடம்பெற்றது. இதில் கலாசாலையின் அதிபர் அவர்கள் உரையாற்றினார்)

# ஈழத்து நூல்களைக் கொண்டாடுவோம்

தமிழ் படைப்பு வழியில் நாளாந்தம் பல நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவை கவிதை தொகுப்புக்களாக, சிறுகதை தொகுப்புகளாக நாவல்களாக, நாடக நூல்களாக என புனைவு சார்ந்த வகையிலும் இவை அல்லாத புனைவு சாராத வகையிலும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

எழுத்தாளர் பரம்பரை என்பது ஈழத்தைப் பொறுத்தவரை தலைமுறைகள் தாண்டி தொடர் கிறது. நூற்றாண்டு காணும் எங்கள் கலாசாலையில் கூட பல எழுத்தாளர்கள் அதிபர்களாக, விரிவுரை யாளர்களாக, ஆசிரிய மாணவர்களாக இருந்து உள்ளமையை வரலாற்றின் வழி அறிகிறோம். இன்றைய இலத்திரனியல் உலகில் நூல் ஒன்றை வெளியிடுவது இலகுவான செயல் என சிலர் நினைத்தாலும் மறுபுறமாய் அதன் வெளியீடு வாசிப்பு விநியோகம் என்பன சவாலுக்கு உரியதாகவே விளங்குகின்றது. நாம் பல விதங்களில் தென் இந்தியாவின் அடிமைகளாக இருப்பதால் எமது மண் சார்ந்த எழுத் தாளர்களால் படைக்கப்படுகின்ற எமது நூல்களை வாங்கி வாசிக்கும் பழக்கம் குறைவாகத்தான் உள்ளது.

இவற்றிற்கு மத்தியில் நம்பிக்கை தரக்கூடிய நல்ல பல முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஈழத்தில் பல இடங்களிலும் இன்று ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் நடந்து வருகின்றன. இதில் எங்கட புத்தகங்கள் என்ற அமைப்பின் முயற்சியும் தேசிய கலை இலக்கிய பேரவை ஜீவனதி பதிப்பகம், பண்டார வன்னியன் புத்தகசாலை, மகுடம் பதிப்பகம், Facebook ஹவுஸ், போன்றோரின் முயற்சிகள் போற்றுதற்குரியது. எனவே ஆசிரியர்களாகிய நாம் மாணவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்காக ஈழத்து நூல்களை வாங்கி வாசிக்கும் பண்பாட்டை மேம்படுத்த வேண்டும் அப்போதுதான் எழுத்தாளர்களால் நம்பிக்கையோடு எழுதும் சூழலும் புத்தகத்தை வெளியிடுவோர் நம்பிக்கையோடு வெளியிடும் சூழலும் ஏற்படும். பல அற்புதமான படைப்புகள் எம்மிடம் உள்ளன. எமது கலாசாலையில் கூட நல்ல பல புத்தக வெளியீடுகள் நடைபெற்றன. அவற்றின் வாங்கி வாசித்து பரவலாக்கம் செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் வாசகர்களாகிய எங்களுக்கு உரியது என்று கூறி அத்தகைய நூல்களை எங்களுக்கு தருபவர்களை கொண்டாடுவோம். ஈழத்தில் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆவணத் தொகுப்பாளர்கள் ஆய்வாளர்களிடத்தில் இதுவரையில் எழுதி எழுதி என்ன சாதித்து என்று பாமரத்தனமாக கேள்வி கேட்கும் பிரதிநிதிகளை



திருமதி மைதிலி கோகுலகண்ணன்
ஆரம்பநெறி ஆசிரிய மாணவி
(2022/2023)

பார்த்திருப்பீர்கள் ஆனால் அந்தப் பேர்வழிகள் நாட்டு நடப்புகளை உலக விவகாரங்களை தெரிந்து கொள்ள வேண்டுமானால் எழுத்து துறையோடு தொடர்புடையவர்களிடம் தான் வரவேண்டும். படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரையில் மட்டுமல்ல தமிழ் இலக்கிய ஆய்வுகளில் ஈடுபடும் விரிவுரையாளர்கள் பேராசிரியர்களும் கூட எம்மத்தியில் வாழும் ஒரு நடமாடும் நூலகத்திடம்தான் வருவார்கள் அல்லது தொடர்பு கொள்வார்கள். காலம் நிற்காது சக்கரம் பூட்டாமலே அதிவகத்தில் ஓடிவிடும் கடந்து சென்ற வசந்த காலம் அழியாத கோலங்களாக மனக்குகை சித்திரங்கள் ஆகிவிடும்.

இடப்பெயர்வு, புலப்பியர்வு தமிழர்களிடம் இணைந்து கொண்ட நிரந்தரப் பெயர்கள் அல்லவா? ஈழத்து நூல் வெளியீடுகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக் கின்றன. இலங்கை எழுத்தாளர் தமது நூல்களை இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் ஐரோப்பாவிலும் வேறு புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் வெளியிட்டு வருகிறார்கள். நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை கலாசார விழுமியங்களை அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். பழந்தமிழ் இலக்கிய மரபில் இலங்கை ஈழம் ஒன்றே குறிக்கப்பட்டு வருகின்றது. ஈழமண்டல நாடெங்கள் நாடே என்று பேசப்பட்டு வந்திருக்கின்றது.

மானிட வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஈழத்து நூல்களின் வெற்றியின் ரகசியம் என்னும் உளவியல் சார்ந்த நூலினை எழுதியவர் அ.ந.கந்தசாமி ஆவார். . முதன்முதலில் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியாகி பின் அச்சிதழாக வெளிவந்த மறுமலர்ச்சி சஞ்சிகை இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் மணிக்கொடி என்று புகழப்பெற்ற சஞ்சிகையாகும். இவ்வாறான ஈழத்துச் சஞ்சிகைகளை நாமும் மதித்து கொண்டாடுவோம்.

# Chronic Obstructive Pulmonary Disease (COPD)

This is a respiratory system related disease. The meaning of Chronic is long term, Obstructive is causing a blockage, Pulmonary is related lungs and Disease is sickness. COPD is a common Lung disease causing restricted airflow and breathing problem. Human's respiratory system is a biological system consisting of specific organs and structures used for gas exchange activity. Respiratory system contains the nostrils, nasal cavity, pharynx, larynx, trachea and lungs. There are millions of small air sacks. They are called alveoli. The gas exchanging procedure is held in the alveoli. Normally we inhale oxygen and exhale carbon dioxide. This is gas exchanging procedure. Bronchi and Alveoli are affected in the condition of COPD.

COPD day is celebrated on 15th of November in every year. Commonly diseases give us suffering and discomfortness. Why do we need to celebrate COPD as an important day? There are three reasons to celebrate COPD day as an important day. They are rise awareness, share knowledge and discuss the ways to reduce the burden of COPD in world. The 2023 theme for world COPD day is "Breathing is life – Act earlier". It tells about the importance of early precaution of respiratory system. COPD's symptoms are shortness of breathing, wheezing, chest tightness, chronic cough, frequent respiratory infections, lack of energy and swelling in ankles. COPD is not a curable disease it refers to a group of diseases that includes chronic bronchitis and emphysema.

Bronchitis is when the airways in the lungs – bronchi become inflames. Its Symptoms are cough, wheezing, and chest discomfort. Emphysema is the breakdown of the walls of the alveoli. Its symptoms are chronic cough and breathing difficulties. We are affected by COPD by following an unhealthy lifestyle. They are smoking, air pollution and respiratory infections like pneumonia.

We can prevent COPD by quitting smoking, avoiding air polluting activities and following unhealthy lifestyles. Treatment is given by doctors according to signs and symptoms of respiratory system and the reports of medical test. They are by medicine, pulmonary rehabilitation and supplemental oxygen.We must consider about this dangerous disease. There are two types of smoking. They are active and passive smoking. If anybody smoke in the home and public places , This society will affect. Smoking habbit creates respiratory track infections. These infections lead to get COPD in future. infections lead to get COPD in future.



**S.Mayooran**
**Teacher Trainee**
**1st Year English(2022/2023)**

If anybody has the smoking habbit, He must avoid smoking for his family's healthy life. If we follow healthy lifestyles, they lead to get healthy respiratory system. We can live happly without COPD in our life. We use many air polluting activities day by day such as burning polythene and plastic, using air polluting things, etc. If we have any respiratory discomfortness, We must go to show the doctor in the early stage. If we follow healthy life styles we can live happily without COPD.

"Let's save our respiratory system from COPD."

..........................................................................................................

## இழந்து போனதைத் தேடி

மண்ணக மாந்தர்களின் மங்காத வாழ்வுமிங்கே
மடிந்துதான் போகுமென்று மறந்துதான் போனதாலே
விண்ணக தேவ மைந்தன் விருப்புடன் தானுயிங்கே
விரைந்திட்ட சேதியது விருப்புடன் கூறுதுமே
எண்ணிய எண்ணம் போல் இருந்திட முடிந்திடுமா
கண்ணெனவே எமைக்காத்து கனிவோடு நடத்துமிறை
கலங்கும்படி மனிதவாழ்வு கசந்துதான் போனதிங்கே

வலிநிறைந்த வாழ்வென்று வழியது பிசகிநின்று
வன்மங்கள் நிறைந்துமே வாழ்கின்றான் மனிதனிங்கே
சலியாது அவனிங்கே பாவங்கள் செய்த போதும்
சாத்திரங்கள் ஏதொன்றும் நன்னெறிப்படுத்தவில்லை
நலிந்திட்ட எம்குலத்தை நன்னெறிப்படுத்திடவும்
நரக நெருப்பின்னின்று தூக்கி நிறுத்திடவும்
பலியாகிப் போவதற்கு யாதேனும் தயாரில்லை - எம்மை
படைத்திட்ட பரமன்தானே பாரினில் இறங்கிவந்தார்

சாயலது பிசகாமல் தரணியிலே படைத்த மாந்தர் - இறை
சாயலை இழந்துமே பாவத்தில் உழன்று வாழ்ந்தார்
காயங்கள் எற்றுமே கருணை கொண்டு தேவன்
காருண்யம் நிறைந்து மனிதனை மீட்க வந்தார்
நேயங்கள் இல்லையென்று நிம்மதி தொலைகையிலே
நேசரவர் தானுமன்று உலகினில் அவதரித்தார்
மாயங்கள் நிறைந்த உலகவாழ்வில் - வாழ்விழந்த
மனிதர்களை தேடியே பரமனவர் பூமி வந்தார்
இழந்துபோன எம்மைத் தேடி ........



**சுரேஸ் றொபட்**
**தமிழ்நெறி ஆசிரிய மாணவன்**
**(2021/2022)**

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிறிமியர் லீக் 2023 இறுதிச் சுற்றும் பரிசளிப்பு விழாவும்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிறீமியர் லீக் 2023. உடலாளர் மன்றத்தின் ஊடாக உடற்கல்வி ஆசிரிய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு இப் பிறீமியர் லீக் 03 அணிகளைக்கொண்டு நடாத்தப்பட்டது. இதில் ஏல முறையிலான அணித்தெரிவு, ஏல முறையிலான வீரர்கள் தெரிவும் இடம்பெற்றது. இதில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் இடம் பெற்றன. இதில் இராவணன்,ஆதவன், கருடன் என்ற தமிழ்ப் பெயர்களைக் கொண்டதான அணிகள் ஏல முறையில் தெரிவு செய்யப்பட்டது. இதில் இராவணன் அணியின் உரிமத்தை கலிஸ்ரர், ஆதவன் அணியின் உரிமத்தை பிரதாப், கருடன் அணியின் உரிமத்தை அகிலதீபன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்ஏலத்தில் 36 வீரர்கள் உள்வாங்கப்பட்டனர். 26.10.2024 அன்று நடைபெற்ற வீரர்கள் ஏலத்தில் ஒவ்வொரு அணியும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் 12 வீரர்களை விலைக்கு வாங்கினர். இந்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆதவன் அணி பொபிநாதனை 30 புள்ளிகள் கொடுத்தும், கருடன் அணி றொக்சனுக்கு 20 புள்ளிகள் கொடுத்தும் விலைக்கு வாங்கப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து துடுப்பாட்டப் போட்டி லீக் முறையில் 31.10.2023 அன்று தொடங்கியது. அன்றைய தினம் கருடன் அணியை எதிர்த்து இராவணன் அணி மோதியது. இரு அணிகளும் 67/2 என்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.தொடர்ந்து இரண்டாவது போட்டி இராவணன் அணியை எதிர்த்து ஆதவன் அணி மோதியது.இதில் துடுப்பெடுத்தாடிய ஆதவன் அணி 28/ 7 பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இராவணன் அணி 29/2 பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது.01.11.2023 அன்றைய போட்டியில் கருடன் அணியை எதிர்த்து ஆதவன் அணி மோதிக்கொண்டது. இதில் ஆதவன் அணி 82/7 என்ற அடிப்படையிலும் கருடன் அணி 84/6 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.இறுதிப்போட்டிக்கு கருடன் அணி தெரிவானது.

இறுதிப்போட்டியில் கருடன் அணியை எதிர்த்து இராவணன் அணி மோதியது. இதில் கருடன் அணி 61/8 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இராவணன் அணி 50/5 ஓட்டங்களைப் பெற்றது.K.P.L தொடரின் வெற்றியை கருடன் அணி தனதாக்கிக் கொண்டது.06.11.2023 அன்றைய தினம் K.P.L உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஆரம்பமானது. அன்று முதலாவது போட்டி ஆதவன் அணியை எதிர்த்து கருடன் அணி மோதியது. இதில் ஆதவன் அணி 3 கோல்களையும் கருடன் அணி 1 கோலினையும் பெற்றுக்கொண்டது. 2 கோல்கள் வித்தியாசத்தில் ஆதவன் அணி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. ஆதவன் அணியின் 3 கோல்களையும் சி.பிரதாப் பெற்றுக்கொடுத்தார். கருடன் அணி On Goal மூலம் 1 கோல் பெற்றுக் கொள்ளப்பட்டது.10..11.2023 அன்றைய தினம் K.P.L உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆதவன் அணியை எதிர்த்து இராவணன் அணி மோதியது. இதில் இரண்டு அணிகளும் இறுதிவரை எந்தவித கோல்களையும் பெற்றுக் கொள்ளவில்லை. வெற்றி தோல்வி இன்றி போட்டி சமநிலையில் முடிவடைந்தது.20.11.2023 அன்றைய தினம் K.P.L உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கருடன் அணியை எதிர்த்து இராவணன் அணி மோதியது. கருடன் அணி 05 கோல்களையும் இராவணன் அணி 02 கோல்களையும் தன்வசமாக்கிக்கொண்டது. இதில் கருடன் அணியைச் சேர்ந்த அகிலதீபன் 4 கோல்களை, சிறிசங்கர் 01 கோலையும்பெற்றுக்கொடுத்தனர். இராவணன் அணியைச் சேர்ந்த கலிஸ்ரர் 01 கோலையும், ராகுலன் 01 கோலையும் பெற்றுக்கொடுத்தார்கள். இப்போட்டியில் 03:02 கோல் அடிப்படையில் கருடன் அணி வெற்றி பெற்றது. 23.11.2023 அன்றைய தினம் K.P.L இன் உதைபந்தாட்டத்தின் இறுதிச்சுற்றுப் போட்டி நடைபெற்றது. இதில் ஆதவன் அணியை எதிர்த்து கருடன் அணி மோதியது. இறுதிப்போட்டியில் சிறப்பான கோலை கருடன் அணி சிறிசங்கர் போட போட்டி 01:00 என்ற வித்தியாசத்தில் கருடன் அணி மகுடத்தை சூடிக்கொண்டது.

K.P.L தொடருக்கான பரிசளிப்பும் நடைபெற்றது. இதில் துடுப்பாட்ட போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக என்.துஷ்யந்தன், சிறந்த பந்துவீச்சாளராக இ.ராகுலன், சிறந்த களத்தடுப்பாளராக சி.ராகுலன்,இறுதிப்போட்டி நாயகனாக து.சிறிசங்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். உதைபந்தாட்ட தொடருக்கான பரிசில்களில் சிறந்த கோல் காப்பாளர் த.பிரபு சிறந்த பின் கள வீரர் கா. பிரசாந்த், தொடர் ஆட்ட நாயகன் கு. அகிலதீபன், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகன் து. சிறிசங்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களுக்கான வெற்றிக் கேடையங்களை கலாசாலையின் அதிபர் திரு ச. லலீசன் அவர்கள் வழங்கி கௌரவித்தார்.











# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி ஆங்கிலம்

## IMHO ஏற்பாட்டில் நடைபெற்ற செயலமர்வு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பக்கல்வி நெறியினருக்கான Activity Based Oral English Work Shop செயலமர்வானது 22;.11.2023 மற்றும் 23.11.2023 ஆகிய இரு தினங்களிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வினை திரு.க.கிருஷ்ணகுமார் (ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம் IMHO, America வின் இணைப்பாளர்) அவர்கள் இணைப்பாளராகக் கடமையாற்றினார். இச் செயலமர்வின் வளவாளர்களாக திரு.செ.தயாகரன் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணக் கல்வி வலயம்) திருமதி. பெனடிக்ற் கலைமகள் (ஓய்வுபெற்ற RESC வவுனியா வலயம்) செல்வி. பிரசாந்தி (உதவியாளர்) ஆகியோர் கடமையாற்றினர்.

இச் செயலமர்வானது Activity Based Oral English Work Shop எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது. இதன் முதல் நிகழ்வாக எமது அதிபர் தலைமையுரை ஆற்றினார் அதன் பின்னர் திரு.க.கிருஷ்ணகுமார் அவர்களால் Activity Based Oral English என்றால் என்ன? அதனை எவ்வாறு மாணவர்களுக்கு கற்பிப்பது தொடர்பாக சிறிய கலந்துரையாடல் செய்யப்பட்டு பின் முதன்மை நிலை 1 ற்கான செயற்பாடுகள் நடமுறைப்படுத்தப்பட்டது.

How do we greet in the morning/ in the afternoon/ at night? என Self-Introduction Game Song மூலம் மாணவர்களுக்கு கற்பிப்பது தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. Places தொடர்பாக "We are in the playground" என்ற Listen and run என்ற Game, விளையாடப்பட்டது.. "Objects in the classroom" வகுப்பில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பற்றியும் அதற்கு "Simon says, show a bag" என்ற Game மூலம் எவ்வாறு இலகுவாக கற்பிப்பது தொடர்பாக கற்பிக்கப்பட்டது. பின்னர் இவற்றுக்கான இரண்டு வார செயற்பாட்டுத்திட்டம் செயற்படுத்துவது தொடர்பாக குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவாக செயற்பாட்டுத்திட்டம் முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து Songs "bits of paper" Song அபிநயத்துடன் பாடி பின் "Our Home" Family Members This is my father, form a family என்ற Game பயிற்றுவிக்கப்பட்டது. பின் Introducing parts of the house This is my house structure, கற்பிக்கப்பட்டு Colour and say என்ற செயற்பாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து Structure "Do you have a pet? என சில எளிமையான வினாக்கள் கற்பிக்கப்பட்டது. அத்துடன் Classroom Language, Songs என இன்றைய தினம் மிகவும் மகிழ்ச்சிகரமான செயற்பாடு நடைபெற்றது. இந்த Workshop இன் மூலம் முதன்மை நிலை 1ற்கு எவ்வாறு இலகுவாகவும் மாணவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வடிவிலும் உற்சாகத்துடனும் எதிர்கால சந்ததியினருக்கு கற்பிப்பது தொடர்பாக கற்றுக் கொண்டனர். இச்செயலமர்வின் மூலம் மாணவர்களுக்கு இவற்றை பயன்படுத்தி Activity Based Oral English செயற்பாட்டை செயற்படுத்துவது தொடர்பாக ஆசிரிய மாணவர்கள் கற்றுக் கொண்டனர்.

தொகுப்பு - திருமதி எஸ்.துவாரகா (ஆரம்பக்கல்விநெறி 2021/2022)







